நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களது செயல்முறை ஆணை

முன்னிலை: வி. சசிமோகன், இ.கா.ப.

ந.க.எண்.அ2/8836/2018 நாள்:25.11.2019
மா.ஆ.எண்.1459/2019

சிறிய தலைப்பு: காவல்துறை - நீலகிரி மாவட்டம் - அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திரு. P. ராஜேஷ் கண்ணா, த/பெ மறைந்த த.கா 395 பூவாலிங்கம் ன்பவரது இளநிலை உதவியாளர் தற்காலிக பணியினை வரன்முறைபடுத்தி ஆணையிடுவது - தொடர்பாக.

பார்வை: தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/ சிஏஆர்1/2016, நாள்: 15.03.2017 மற்றும் 21.12.2017

* * * * *

**ஆணை:**

திரு. P. ராஜேஷ் கண்ணா, த/பெ மறைந்த த.கா 395 பூவாலிங்கம் என்பவர் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/சி.ஏ.1/2005, நாள்: 13.07.2005ன் படி கருணை அடிப்படையில் கணினி விபர பதிவாளராக மதுரை மாவட்ட காவல் அலுவலகத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் 07.10.2005 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அரசாணை 4 (டி) எண்.52, உள் (காவல்-15) துறை, நாள்: 22.06.2007 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.8639/சி.ஏ.1/2007, நாள்: 29.06.2007ன் படி தொகுப்பூதிய அடிப்படையிலிருந்து 3050-75-3950-80-4590 என்ற காலமுறை ஊதிய விகிதம் அடிப்படையில் 01.05.2007 முதல் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. மேலும், இவரது தற்காலிக கணினி விபர பதிவாளர் பணி அரசாணை நிலை எண்.220, உள் (காவல்-15) துறை, நாள்: 18.02.2016 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.175817/A&R/2007, நாள்: 14.03.2016 பிரகாரம் 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து, மதுரை மாவட்ட ஆணை எண். 406/2016, ந.க.எண்.பி3/10895/137/16, நாள்: 13.04.2016-ன் படி ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலும், தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.84761/NGB II (2)/2018, நாள்: 02.08.2018-ன் படி மேற்படி கணினி விபர பதிவாளர் இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டு, நீலகிரி மாவட்ட காவல் அலுவலகத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளார். இவ்வலுவலக ஆணை எண் 11672/அ2/2018, நாள் 09.08.2018 ன்படி மேற்படி கணினி விபர பதிவாளர் 13.08.2018 பி.ப அன்று நீலகிரி மாவட்ட காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்துள்ளார்.

3) இவரது மூலக்கோப்பை பரிசீலனை செய்ததில், மேற்படி இளநிலை உதவியாளரின் தகப்பனார் 09.05.1999 அன்று இறந்துள்ளார். மறைந்த அரசு ஊழியரின் மனைவி தனது மகனுக்கு (P. ராஜேஷ் கண்ணா) காவல் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 13.01.2000 அன்று மதுரை மாவட்ட காவல் அலுவலகத்தில் மனு சமர்ப்பித்துள்ளார். மேலும், மேற்படி மறைந்த அரசு ஊழியரின்

Scanned By Scanner Go

மகன் திரு. P. ராஜேஷ் கண்ணா என்பவர் 11.02.2000 அன்று தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்ப்பித்துள்ளார். மறைந்த அரசு ஊழியரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளனர். மனு சமர்ப்பித்த நாளன்று மனுதாரர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். மேற்படி 10ம் வகுப்பு சான்றிதழின் உண்மை தன்மை சரியானது என இணை இயக்குநர் (பணியாளர்), அரசுத் தேர்வுகள் இயக்கம், சென்னை அவர்களின் கடித எண்.ஓ.மு.எண்.087658/வி4/2019, நாள்: .09.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மறைந்த அரசு ஊழியரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளதாலும், மனு சமர்ப்பித்த நாளன்று மனுதாரர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், அரசாணை நிலை எண்.560 தொ (ம) வே.வா.துறை, நாள்: 03.08.1977 மற்றும் அரசாணை நிலை எண்.202 தொ (ம) வே.வா.துறை, நாள்: 08.10.2007-ன் படி விதி தளர்வு தேவைப்படாது என்பதாலும், விதி தளர்வு தேவைப்படாத தனியர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறத்தேவையில்லை எனவும், கருணை அடிப்படை பணி வரன்முறைப்படுத்துதல் தொடர்பான அனைத்து அசல் சான்றிதழ்கள் / ஆவணங்கள் முழுமையாக இருப்பின் இத்தனியர்களுக்கான பணி சார்ந்த தொடர் நடவடிக்கைகளை பணி நியமன அதிகாரி அளவில் முடித்து அதன் விபரத்தை தலைமையலுவலகத்திற்கு தெரிவிக்க பார்வையில் காணும் சுற்றுக் குறிப்பாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாலும், இவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான **13.08.2018 அன்று முற்பகல்** முதல் பணி வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம் /- வி. சசி மோகன்,
காவல் கணிகாணிப்பாளர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்,

திரு. P. ராஜேஷ் கண்ணா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட காவல் அலுவலகம், நீலகிரி மாவட்டம்.
நகல்: காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை - 04.

/உ.ந.உ.ப.அ/

கண்காணிப்பாளர

Scanned By Scanner Go